<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் நாள் (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தினமும் 8 படகு ஓட்டுநர் மூலம் 60 நாட்களுக்கு ஏரியை சுற்றியுள்ள களைச் செடிகளை அகற்றும் பணி ரூ.1.25 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலரின் 18.08.2020ம் தேதிய முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | தினக்கூலி அடிப்படையில் ஒரு நபருக்கு ஒரு நாள் கூலியாக ரூபாய். |
|---|---|---|
| 1. | திரு.L.ஜான் எபிநேசர்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>கொடைக்கானல். | ரூ.250/– |
| 2. | திரு.P.சுரேஷ் குமார்,<br>சமாதான நகர், புதுவிளாங்குடி,<br>மதுரை–18. | ரூ.375/– |
| 3. | திரு.N.மனோகரன்,<br>12 / 1E5, லாஸ்காட் ரோடு,<br>கொடைக்கானல். | ரூ.405/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.L.ஜான் எபிநேசர், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **871, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பார்க்வியு பங்களா மற்றும் ஆணையாளர் குடியிருப்பு பகுதியில் உள்ள காலியிடம் புதர் மண்டி மண் மேடுகளாக உள்ளது. இந்த பகுதியினை சுத்தம் செய்து அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகளை பயிரிட ஏதுவாக இப்பகுதியினை JCB & Pickup Jeep உதவியுடன் ரூ.90,000/– மதிப்பீட்டில் சுத்தம் செய்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1. மாதா எர்த் மூவர்ஸ், கொடைக்கானல். — ரூ. 3,017/–
2. ஜான் எபிநேசர், நகராட்சி ஒப்பந்ததாரர் — ரூ. 3400/–

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மாதா எர்த் மூவர்ஸ், கொடைக்கானல் மூலம் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 59,000/– ஆகும்.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **872, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, நகர் பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று நகர் பகுதியில் அதிகமாக உள்ளதாலும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் ( Containment Zone ) மற்றும் நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தும் பகுதிகளில் ( Home Isolation ) தொடர்ந்து 14 நாட்கள் கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பு குறைவாக உள்ளது. எனவே, மேற்படி கொரோனா தடுப்பு பணியில் சுணக்கம் ஏற்படாமல் இருக்க பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட கிருமி நாசினிகள் மற்றும் நோய் தடுப்பு பணிக்கு தேவையான பாதுகாப்பு உபகரணஙகள் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 30 டன் |
| 2. | பிளிச்சிங பவுடர் | 15 டன் |
| 3. | லைசால் | 1500 லிட்டர் |
| 4. | கபசர குடிநீர் | 25 கிலோ |
| 5. | HDPE பைகள் | 50 பாக்ஸ் ( பெரியது ) |
| 6. | HDPE பைகள் | 50 பாக்ஸ் (சிறியது) |
| 7. | N 95 முகவுரை | 100 எண்ணம் |
| 8. | முகவுரை | 15,000 எண்ணம் |
| 9. | கையுறை | 10,000 எண்ணம் |
| 10. | லெதர் கையுறை | 100 ஜோடி |

எனவே மேற்கண்ட பொருட்கள் அத்தியாவசிய அவரமாக தேவையாக உள்ளதால் சுகாதார பணியின் அவரம் கருதி தமிழ்நாடு அரசு நிதி(ஊதியம்) துறை செயலாளர் அவர்களின் கடிதம் எண். 74/JS(MA)/ Finance(Salairies)/2020, Dated 1.4.2020 ன்படியும், இதர கூட்டுறவு நிருவனஙகளை விட அரசு கூட்டுறவு நிறுவனமான இராமநாதபுரம் மாவட்ட மத்திய நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., மதுரை–ன் விலை பட்டியல் குறைவாக உள்ளதால் மேற்கண்ட பொருட்களை இராமநாதபுரம் மாவட்ட மத்திய நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., மதுரை–ல் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 18.85 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு.

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசால் கொரோனா வைரஸ் தடுப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **873, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி 1899 ல் தோற்றுவிக்கப்பட்டு 31–5–1994ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை , அரசாணை (பல்வகை) எண். 143 ன் படி 31–5–1994 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சி 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 66.50 கி.மீட்டர் சாலையும், 54.00 கி.மீட்டர் மழை நீர் வடிகாலும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 36501 ஆகும். இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தோராயமாக 10000 ஆகும். கோடை காலஙகள் மற்றும் விடுமுறை நாட்களில் இதன் எண்ணிக்கை தினசரி 50000 க்கும் அதிகமாக உள்ளது.

கொடைக்கானல் நகரில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகத்துள்ளதால், வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் கோடை காலங்களிலும் மற்ற காலங்களிலும், மிகுந்த வாகன நெரிசல் ஏற்படுகிறது. இந்த நேரத்தில் மிக அதிகமான சாலைகள் மிகவும் குறுகலாக இருப்பதால் சாலை ஓரஙகளை நம்பி வாகனஙகளை இயக்குவதால், சாலையின் ஓரஙகளில் நிலச்சரிவு ஏற்படுவதுடன், விபத்துகளும் அடிக்கடி நிகழ்ந்து வருகிறது.

மேலும், தற்போது கொடைக்கானல் நகர பகுதியில் மிக நெருக்கமான குடியிருப்பு அதிகரித்து வருகிறது. குடியிருப்பு பகுதிகள் பல அடுக்குகளாக அமைந்துள்ளது. இந்த பகுதியில் கனமழை காலங்களில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு மக்கள் வீடுகள் மற்றும் உடைமைகள் பாதிக்கப்படுவதோடு உயிர்சேதம் ஏற்படவும் அதிகமான வாய்ப்புள்ளது. ஏனவே, மக்கள் பெருக்கம் மிகுந்த இந்த பகுதியை RCC கட்டுமான தடுப்புச் சுவர்கள் அமைப்பது மிக அவசியமாக உள்ளது.

மேலும் இயற்கை பேரிடர் மற்றும் வெள்ளக் காலங்களில் மிக அதிக மழைப் பொழிவு காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டு தடுப்பு சுவர் இல்லாத சாலைகள் சேதமடைந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. மலைப் பிரதேசஙகளில் உடனடியாக சரி செய்வது மிகுந்த சிரமஙகளுக்கு உள்ளாக நேரிடுகிறது.

மேலும், ஆண்டின் பெரும்பாலான காலஙகளில் மழை பெய்வதாலும், எப்பொழுதும் பனிமூட்டமாக இருப்பதாலும், அனுபவமற்ற வாகன ஓட்டுநர்கள் தடுப்புச் சுவர் இல்லாத சாலைகளில் விபத்துகளில் சிக்கி கொள்கிறார்கள்.

எனவே, பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடம் இருந்து தொடர்ந்து நகராட்சிக்கு தடுப்பு சுவர் கட்டுவதற்கு கோரிக்கை வந்த வண்ணம் உள்ளது. ஆகையால் நகராட்சியில் போதிய நிதி ஆதாரஙகள் இல்லாததால் நகராட்சி பொது நிதியின் மூலம் குறைந்த அளவிலான தடுப்புச் சுவர்களையே நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட பணிகளை அத்தியாவசிய தேவையாக செய்து முடித்திட வேண்டியுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | நீளம் (மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | அப்பர்லேக் சாலை முதல் பாம்பார்புரம் சந்திப்பு வரை தாஙகு சுவர் அமைத்தல் | 260.00 | 200.00 |
| 2 | சோமசுந்தரம் காலணி (துந்திமேடு) பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 250.00 | 180.00 |
| 3 | சீனிவாசபுரம் பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 200.00 | 140.00 |
| 4 | செண்பகனூர் சர்ச் முதல் விநாயகர் கோயில் வரை தாஙகு சுவர் அமைத்தல் | 300.00 | 175.00 |
| 5 | மல்லிரோடு , அண்ணாநகர், இந்திரா நகர் பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 165.00 | 97.00 |
| 6 | எரிவாயு தகன மேடை பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 85.00 | 98.00 |
| 7 | கல்லரைமேடு முதல் இஸ்லாமிய கல்லரை வரை தாஙகு சுவர் அமைத்தல் | 180.00 | 190.00 |
| 8 | காந்திபுரம் நகராட்சி குடியிருப்பு பின்புறம் மற்றும் கால்நடை மருத்துவமனை பின்புறம் தாஙகு சுவர் அமைத்தல் | 215.00 | 130.00 |
| 9 | செண்பகனூர் புதிய குப்பை கிடஙகு சாலையில் தாஙகு சுவர் அமைத்தல் | 300.00 | 192.00 |
| 10 | செண்பகனூர் ( கிறிஸ்துவ கல்லூரி எதிர்புறம் ) பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 265.00 | 200.00 |
| 11 | செண்பகனூர் ( ஹில் கன்ட்ரி கிளப் எதிர்புறம் ) பகுதியில் தாஙகு சுவர் அமைத்தல் | 240.00 | 195.00 |
| 12 | செல்லபுரம் தடுப்பணை செல்லும் சாலையில் தாஙகு சுவர் அமைத்தல் | 250.00 | 175.00 |
| 13 | கார்மேல்புரம் முதல் சவேரியார் நடுநிலைப் பள்ளி வரை தாஙகு சுவர் அமைத்தல் | 250.00 | 200.00 |
| 14 | கார்மேல்புரம் சவேரியார் நடுநிலைப் பள்ளி முதல் சீனிவாசபுரம் வரை தாஙகு சுவர் அமைத்தல் | 300.00 | 190.00 |
| 15 | ஆனந்தகிரி 4வது தெரு நீதிமன்றம் அருகில், புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு மற்றும் பல்கலைக் கழகம் அருகில் தாஙகு சுவர் அமைத்தல் | 175.00 | 125.00 |
| | மொத்தம் | 3435.00 | 2487.00 |

எனவே, கொடைக்கானல் நகரின் சர்வதேச முக்கியத்துவத்தையும் , சுற்றுலா பயணிகளின் நலத்தினையும் மற்றும் நகர்ப்பகுதியில் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளின் பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணிகளை சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 (SADP 2020-2021) ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **874, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரங்கள் மேலாண்மை செய்து உரம் தயாரிக்கும் பணிக்கு இயந்திரங்கள் நிருவும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இந்த இயந்திரஙகளை இயக்குவதற்கு மும்முணை மின் இணைப்பிலிருந்து இணைப்பு கொடுத்து இயக்குவதற்கு LTCT Electrification with starter, Panel Board connection to Main பணிகள் பார்த்தால்தான் இயந்திரங்களை முழுமையாக இயக்கி தூய்மை பணிகள் மேற்கொள்ள இயலும். மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2015–2016 ல் ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரஙகள் சப்ளை செய்து பொருத்தும் பணி மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, LTCT Electrification with starter, Panel Board connection to Main பணிகள் குப்பை கிடஙகில் மேற்கொள்வதற்கு பொது நிதியின் மூலம் ரூ. 26.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். திடக்கழிவு மேலாண்மையினை மேம்படுத்தும் பொருட்டு மேற்கண்ட பணியினை நகராட்சியின் பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **875, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நாயுடுபுரம், பச்சைமரத்து ஓடை , ECC சாலையின் மேல் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான நீர்த்தேக்கம் (Check dam) அமைந்துள்ளது. மழைக்காலஙகளில் இந்த நீர்த்தேக்கத்தில் நீரை சேமித்து அருகில் உள்ள நாயுடுபுரம் ECC சாலை, சண்முகபுரம் , பச்சைமரத்து ஓடை மற்றும் ஜே.ஜே. நகர் பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும். எனவே, குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வால்வுகள் பொருத்துவதற்கு குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 5,40,000/– ( ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும் ) க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **876, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான செனட் மேரிஸ் சாலை பார்க் வியு மற்றும் ஆணையர் குடியிருப்பு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சுமார் 1.00 ஏக்கர் பரப்புள்ள காலியிடமானது செடிகள் மூடியும், மண் மேடுகளாகவும் உள்ளது. இந்த இடத்தினை சுத்தம் செய்து, மண் மேடுகளை சமப்படுத்தி அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் பயிரிடுவதற்கு ஏதுவாக நிலத்தினை சீர் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர JCB இயந்திரம், பிக்கப் வாகனம் மற்றும் உடைகற்கள், வேலையாட்கள் கூலி ஆகியவற்றிற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | விலைப்புள்ளி விபரம் | JCB Rate for 1 Hour | Pickup Jeep Rate for 1 day Rs. | Stone cutter Rate for 1 day Rs. |
|---|---|---|---|---|
| 1 | மாதா எர்த் மூவர்ஸ், செண்பகனூர், கொடைக்கானல். | 847/– | 1500/– | 670/– |
| 2 | எல். ஜான் எபிநேசர், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல் | 1000/– | 1600/– | 800/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மாதா எர்த் மூவர்ஸ், செண்பகனூர், கொடைக்கானல் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **877, நாள். 21.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.